ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள் பேசுகின்றபோது, ** என்ற ஒரு குறிப்பினைச் சொன்னார்கள். அந்த வாசகம் அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம் என்பதால், அது நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

(அ.ஆ) தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2019), மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2019)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கான நலத் திட்டங்களுக்காக*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

@ *19–7–2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிலம் கையகப்படுத்தக்கூடிய நோக்கத்தில் இச்சட்டத்தைக் கொண்டு வருவதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதை நாங்கள் வரவேற்கவே செய்கிறோம். ஆனால், பொதுவாக இந்தச் சட்டமுன்வடிவு குறித்த சில கருத்துகளை நான் இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

மத்திய சட்டம், Central Act, 2013, 26-9-2013 அன்று நிறைவேற்றப்பட்ட பிறகு, 1978 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துவதற்கான சட்டம், அதற்குப் பிறகு 1994 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தொழில் நோக்கங்களுக்கான சட்டம், அதேபோல, 2002 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், இந்தச் சட்டங்களையெல்லாம் பார்த்தோமென்றால், automatic ஆக repugnant and void ஆகிறது; Inoperable ஆகக்கூடிய நிலை வந்துவிட்டது. அதற்குப் பிறகு இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்று சொன்னால், 2014 ஆம் ஆண்டில் சட்டமுன்வடிவு எண் 5—ஐ நிறைவேற்றி, அதை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பினீர்கள். ஆனால், அதற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைக்காமல், அது திரும்பவும் வந்துவிடுகிறது. (குறுக்கீடு) It was withdrawn. நீங்கள் அதை என்ன செய்கிறீர்கள் என்றால், திருப்பி அனுப்பப்பட்ட பிறகு அந்த Bill—ஐ நீங்கள் withdraw செய்கிறீர்கள். அடுத்தமுறை என்ன செய்கிறீர்கள் என்றால், சட்டமுன்வடிவு எண் 30-ஐ திரும்பவும் நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள். 8-12-2014 அன்று நிறைவேற்றப்பட்டு, அதற்குக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, அதை 5-1-2015 அன்று நீங்கள் அரசிதழில் வெளியிடுகிறீர்கள். அதை எப்போது செய்திருக்கிறீர்கள் என்றால், retrospective effect ஆக 1-1-2014-ல் இருந்து போட்டிருக்கிறீர்கள். ஆனால், 31-12-2014-க்குள்கூட வாங்கவில்லை. அது அந்த period—க்குள் lapse ஆகிறது. Even otherwise, பரவாயில்லை. எதுவாக இருந்தாலும் அதை உங்களால் வாங்க முடியவில்லை. நீங்கள் அதில் முனைப்பாக இருந்து குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலை வாங்கவில்லை, அது வேறு விஷயம். இந்த நிலையில் இந்தச் சட்டங்கள் உயர் நீதிமன்றத்திற்கு வருகின்றன. இந்த நோக்கக் காரண விளக்க உரையில், உயர் நீதிமன்றத்தில் என்ன காரணங்களால் இந்தச் சட்டம் செல்லத்தக்கதல்ல என்று சொல்லியிருக்கிறது என்பதை நீங்கள் விளக்கவில்லை. ஆனால், Central Act—ல் கொடுத்திருக்கக்கூடிய பல்வேறு நல்ல விஷயங்களை

[திரு. தங்கம் தென்னரசு] [2019 ஜூலை 20

இது உள்ளடக்கியதாக இல்லை. இது unconstitutional என்று சொல்லி, இன்றைக்கு உயர் நீதிமன்றம் அந்தச் சட்டங்களை செல்லத்தக்கதல்ல என்று தீர்ப்பு அளித்து, அந்தச் சட்டங்களைச் கொடுத்திருக்கிறீர்கள்.

பிற்பகல் 3-45

நான் இந்த அவையிலே உங்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, உயர் நீதிமன்றம் செல்லத்தக்கதல்ல என்று சொல்லி, ஒரு சட்டத்தைக் கொடுத்த பிறகு அதே சட்டத்திற்கு உயிரூட்டி திரும்பவும் கொண்டு வருவதன் மூலமாக, அந்தச் சட்டங்களை உயர் நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றால், அந்தச் சட்டங்கள் உயர் நீதிமன்றத்தால் செல்லத்தக்கதல்ல என்று மீண்டும் நிறுவப்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒன்று. இன்னொன்று Central Act–ஐக் கொண்டு வரும்போது மிக முக்கியமான ஒரு விஷயத்திற்காகக் கொண்டு வந்தார்கள். என்ன காரணம்? விவசாயிகளுடைய நிலப் பரப்பு குறைந்துவிடக் கூடாது. விவசாயிகளுக்கான அந்த வேளாண்மை விளைநிலங்களை நாம் காப்பாற்ற வேண்டும். அதிலே முக்கியமாக compensation, அதற்கான இழப்பீடு கொடுக்கும்போதுகூட, விவசாயிகளுக்கு அந்த நிலங்களை எடுப்பதற்கு முன்பாகவே அந்த இழப்பீட்டுத் தொகையை நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பன போன்ற நல்ல விஷயங்கள் இருக்கின்றன. இன்னொன்று நிலங்களை எடுக்கும்போது, எந்த purpose–க்கு அது பயன்படுகிறதோ அதைத் தவிர்த்து எஞ்சியிருக்கக்கூடிய நிலங்களைக் கையகப்படுத்தக் கூடாது. குருவாரப் பள்ளிகளில்கூட பார்த்தீர்கள் என்றால், இன்றைக்கு நீங்கள் 125 ஏக்கருக்கு acquire செய்கிறீர்கள். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலை வந்துவிடக் கூடாது என்கிற காரணத்திற்காகத்தான் Central Act வந்தது. ஆக, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, Central Act–ல் இருக்கக்கூடிய இந்த நல்ல ஷரத்துகளையெல்லாம் உருவாக்கி, உள்ளடக்கி a fresh Law, நீங்கள் ஒரு புதிய சட்டமுன்வடிவை இங்கே கொண்டு வருவதைவிடுத்து, பழைய சட்டமுன்வடிவைக் கொண்டு வருவதன் நோக்கம் என்ன என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே குறிப்பாக, விவசாயப் பெருங்குடி மக்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில், அவர்களுடைய விளைநிலங்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில், பொதுவாக தமிழ்நாட்டினுடைய பாசனப் பரப்பு,

பயிரிடக்கூடிய நிலங்களின் பரப்பைக் காப்பாற்றக்கூடிய வகையில், புதியதாக ஒரு சட்டமுன்வடிவை நீங்கள் உருவாக்கிட வேண்டும். இப்போதிருக்கக்கூடிய இதே நிலையில் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவருவது ஏற்புடையது அல்ல என்பதை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்தாகச் சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துகளைச் சொல்லும்போது, unconstitutional என்று சொன்னார். ஏற்கெனவே இந்த மூன்று சட்டங்களின் வாயிலாக காலம் காலமாக பல நில எடுப்பு, நாட்டினுடைய வளர்ச்சிக்காக, ஆதி திராவிடர் வளர்ச்சிக்காக, நெடுஞ்சாலை வளர்ச்சிக்காக, தொழில் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்டு செயல்பாட்டில் இருக்கிறது. மத்திய அரசு கொண்டுவந்த பிறகு, மத்திய அரசின் சார்பில் அவர்கள் 13 சட்டங்களுக்கு விலக்கு அளித்து, அதை நிறைவேற்றித் தருகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அன்றைக்கு பொது நோக்கங்களுக்காக மத்திய, மாநில அரசுகளின் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்காக, வேண்டுகோளின்பேரில், தனியார் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. 31–12–2015 வரை மத்திய நில எடுப்புச் சட்டம், 1894–ன்கீழ் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. ஏற்கெனவே மத்தியச் சட்டம் இருக்கிறபோதே இந்த மூன்று சட்டங்களின் அடிப்படையிலேதான் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். இந்தச் சட்டத்தைத் தவிர, தமிழக அரசு மூன்று நில எடுப்புச் சட்டங்களை பின்வருமாறு நிறைவேற்றியுள்ளது. 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் ஆகிய இந்த மூன்று சட்டங்களின்கீழ் நிலங்களை நாம் கையகப்படுத்துகிறோம். மேற்படி தமிழக அரசின் மூன்று நில எடுப்புச் சட்டங்களின்கீழ், நில எடுப்பு நடவடிக்கைகள் கடந்த 31-12-2013 வரை தங்குதடையின்றி நடைபெற்று வந்தன. ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்த மத்திய நில எடுப்புச்

சட்டம், 1894-ஐ இரத்துச் செய்து, புதிய நில எடுப்புச் சட்டமான, நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டம், 2013 (மத்திய சட்டம் 30/2013)-ஐ மத்திய அரசு இயற்றி, 1-1-2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்தப் புதிய நில எடுப்புச் சட்டத்தின்படி, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு போன்றவை நிலம் கையகப்படுத்தும் நடைமுறையில் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளன.

பிற்பகல் 3—50

தமிழக அரசின் மேற்கண்ட 3 நில எடுப்புச் சட்டங்களின்கீழ், நில எடுப்பு நடவடிக்கையைத் தொடர்ந்திடும் வகையில், தமிழக அரசு புதிய நில எடுப்புச் சட்டத்திற்கு, தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1/2015-ஐ நிறைவேற்றியது. இத்திருத்தச் சட்டத்தின்கீழ், புதிய நில எடுப்புச் சட்டத்தில், 4 ஆம் அட்டவணையில் உள்ள 13 மத்திய நில எடுப்புச் சட்டங்கள், சரியீடு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்பாடுகள் நீங்கலாக, புதிய சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதைப் போன்றே, அதாவது, மத்திய அரசிற்கு எவ்வாறு விலக்களிக்கப்பட்டதோ, அதேபோன்றே தமிழக அரசின் மேற்கண்ட 3 நில எடுப்புச் சட்டங்களுக்கும் விலக்களிக்கும் வகையிலே, இந்தத் திருத்தச் சட்டத்தில் பிரிவு 105A சேர்க்கப்பட்டு, அதன்கீழ் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள 5 ஆம் அட்டவணையில் தமிழ்நாடு மாநிலச் சட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்தத் திருத்த மசோதாவிற்கு 1-1-2015-ல் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதனால் நில உரிமையாளர்களுக்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் நியாயமான சரியீடு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பயன்பாடுகள் வழங்கப்பட்டு, அதன்மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டு வந்தது. இதனால், தொழிற்சாலைகள் அதிகளவில் அமைக்கப்பட்டு, சாலைகள் விரிவாக்கம்மற்றும் மேம்பாடு, புதிய சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தொழில் முன்னேற்றத்தினால் வேலைவாய்ப்புகளும் அதிகரித்தன.

2014 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில், நியாயமான சரியீடு பெறுவதற்கும் ஒளிவுமறைவின்மைக்கும் மறுவாழ்வளிப்பு

மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, (தமிழ்நாடு சட்டம் 1/2015)—ஐ எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனு எண்கள் மற்றும் பிறவற்றில் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் 2 நீதிபதிகள் அடங்கிய ஆயம் 3—7—2019 அன்று வழங்கிய தீர்ப்பில், உறுப்பு 254 (1)—ன் செயல்பாடு, மேற்படி தமிழ்நாடு சட்டங்களை 2013 ஆம் ஆண்டு மைய சட்டம் 30/2013 இயற்றப்பெற்ற நாளான 27—9—2013 முதல் எதிரானது என்றும், செல்லத்தக்கதல்ல என்றும் தீர்ப்பளித்துள்ளது. இந்தச் சட்டத்தை அமல்படுத்தியதில் வழிமுறைகளில் குறைபாடுகள் உள்ளதாகத் தெரிவித்து, மாண்பமை நீதிமன்றம், நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவு மறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டம் 2013, பிரிவு 105A—ன்கீழ் புதியதாக புகுத்திய தமிழ்நாடு சட்டம், செல்லாது என உத்தரவிட்டுள்ளதை நான் இங்கே மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் 3 நில எடுப்புச் சட்டங்களின்கீழ் 27—9—2013 அன்று மற்றும் அன்றைய தேதி முதல், 23,804 ஹெக்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டபோதிலும், 1,373 ஹெக்டர் நிலம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள 22,431 ஹெக்டர் நிலத்தினைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மதிப்பு ஏறத்தாழ 1,84,778 கோடி ரூபாயினை உள்ளடக்கியது. இந்தத் திட்டமானது சுமார் 1.83 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் திறன் உள்ளது. இதன்காரணமாக, இந்தத் திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்ட அல்லது கையகப்படுத்தப்படும் நிலங்கள் பாதிக்கப்படக்கூடும். இதன் பலனாக அதிகமான வளர்ச்சித் திட்டங்கள் தடைபடுவதோடு மட்டுமின்றி, அரசு கருவூலத்திற்கு பெரிய அளவில் நிதி இழப்பு ஏற்படக்கூடும். இந்த அசாதாரண சூழ்நிலையில், இதற்குத் தீர்வு காணும் நோக்கில், 3 தமிழ்நாடு சட்டங்களின் செயல்முறையை உயிர்ப்பிப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. மேலும், மைய சட்டம் 30/2013—ல் உள்ள வகைமுறைகளின் அடிப்படையில் இழப்பீட்டினை நிர்ணயித்தல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை தமிழ்நாடு சட்டத்தின்படியும்,

கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குப் பொருந்தும் வகையிலும் சட்டம் இயற்ற அரசு முடிவு செய்துள்ளது.

ஆகவே, மைய சட்டத்தில் compensation என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதை இச்சட்டத்தின்படியும் கொடுத்துக் கொண்டேயிருக்கிறோம். ஆகவே, எந்தவகையிலும் பாதிக்கப்படாத வகையிலேதான், மத்திய அரசு சட்டத்தின் வழிகாட்டுதல்களின்படிதான் compensation கொடுத்துக் கொண்டிருக்கிறோம், யாரும் பாதிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 13 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.   (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.   (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3–55

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலம் கையகப்படுத்துதல் சட்டங்கள் (செயல்முறை உயிர்ப்பித்தல், திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2019) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.   (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.   (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.